RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

www.malaithanthi.in

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 205 | ஜூலை.31 2026 வெள்ளிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

# காவிரி விவகாரத்தில் தவெக அரசின் மெத்தனப்போக்கை கண்டித்து ஆக.3ல் ஆர்ப்பாட்டம்: ஸ்டாலின்

சென்னை: ஜூலை.31-

'விவசாயிகளை வஞ்சிக்கும் தவெக அரசைக் கண்டித்து திமுக சார்பில் ஆகஸ்ட் 3ம் தேதி காலை 10 மணியளவில் தஞ்சாவூரில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும்'' என அக்கட்சியின் தலைவர் மு.க. ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், 'வேதனை தரும் த.வெ.க. ஆட்சி, விவசாயிகள் படும் துன்பமே அதற்கு சாட்சி என நாட்டின் முதுகெலும்பாய் விளங்கும் விவசாயிகளை வீதிகளில் போராடவிட்டு வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்கிறார் முதல்வர்.

தேர்தலுக்கு முன்பு, "5 ஏக்கருக்குக் குறைவாக நிலம் வைத்துள்ள விவசாயிகள் கூட்டுறவு வங்கிகளில் வாங்கியுள்ள பயிர்க்கடன்கள் முற்றிலுமாகத் தள்ளுபடி செய்யப்படும். 5 ஏக்கருக்கு மேல் நிலம் வைத்துள்ள விவசாயிகள் கூட்டுறவு வங்கிகளில் வாங்கியுள்ள பயிர்க்கடன்களில் 50 சதவிகிதம் தள்ளுபடி செய்யப்படும்'' என தவெக தெரிவித்தது.

தேர்தலுக்குப் பின்பு 50 ஆயிரம் ரூபாய் வரை மட்டுமே முழுக் கடன் தள்ளுபடி என்ற வெற்று அறிவிப்பை வெளியிட்டு, அதன்காரணமாக விவசாயிகள் வெகுண்டெழுந்து தற்போது வரை போராட்டம் நடத்திக் கொண்டிருப்பதால், 75 ஆயிரம் ரூபாய் வரை மட்டுமே முழுக் கடன் தள்ளுபடி அறிவிக்கப்பட்டது. சொன்னதைச் செய்ய நேரம் கேட்ட முதல்வர், இன்னும் எவ்வளவு நேரம் வேண்டும் என்றாவது விவசாயிகளிடம் சொல்லியிருக்க வேண்டும்.

தமிழ்நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதில் இருந்தே மேகேதாட்டு அணை கட்டுவதில் கர்நாடக அரசு தீவிரம் காட்டி வருகிறது. ஜூன் 11 அன்று ஒன்றிய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அவர்களை கர்நாடக முதல்வர் நேரில் சந்தித்து மேகேதாட்டு திட்டத்துக்கு நிதியுதவி கோரி மனு அளித்துள்ளார். ஜூன் 12 அன்று ஒன்றிய ஜல்சக்தி துறை அமைச்சரை நேரில் சந்தித்து மேகேதாட்டு திட்டத்துக்கு ஒப்புதல் வழங்க வலியுறுத்தினார்.

ஜூலை 27 அன்று டெல்லியில் கர்நாடகத்தைச் சேர்ந்த அனைத்துக் கட்சி எம்.பி.க்களுடன் கூட்டம் நடத்தி, மேகேதாட்டு அணை கட்டக் கடைமடை மாநிலங்களின் அனுமதி தேவையில்லை என நாடாளுமன்றத்தில் ஒன்றிய ஜல்சக்தி துறை தெரிவித்த பதிலை மேற்கோள் காட்டிப் பேசியுள்ளார். அதேநாளில், கர்நாடக அமைச்சர் ராமலிங்க ரெட்டி, கர்நாடக அரசின் டெல்லி பிரதிநிதி, கர்நாடக அரசின் தலைமை வழக்கறிஞர் மற்றும் மூத்த அதிகாரிகளுடன் மேகேதாட்டு அணை தொடர்பான ஆய்வுக்



கூட்டத்தையும் நடத்தியுள்ளார்.

ஊடகங்களிடம் தொடர்ந்து மேகேதாட்டு அணையைக் கட்டியே தீருவோம் எனவும், தமிழ்நாடு அரசின் அனுமதி தேவையில்லை எனவும் கர்நாடக முதல்வர் பேசி வருகிறார். இதற்கு மாறாக, இவ்விவகாரத்தில் தமிழ்நாடு முதல்வர் பிரதமருக்குக் கடிதம் எழுதியதோடு தனது கடமை முடிந்துவிட்டது என மவுனம் காத்து வருகிறார்.

இதற்கிடையில், தமிழ்நாடு முதல்வர் கர்நாடகா சென்று பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார் என்று வேளாண் துறை அமைச்சர் சொன்னார். பின்னர் அவரும் இன்னும் சிலரும் இல்லை என்று மறுத்தார்கள்.

இப்போது தமிழ்நாடு சார்பில் சில விவகாரங்கள் தொடர்பாகத் தமிழ்நாடு முதல்வர் பேச்சுவார்த்தை நடத்த விருப்பம் தெரிவித்துள்ளதாக, கர்நாடக முதல்வரே தெரிவித்துள்ளார். மேலும் இதுதொடர்பாக வரும் ஆகஸ்ட் 3ஆம் தேதி தமிழ்நாடு முதல்வர் கர்நாடகா செல்வதாகவும் செய்திகள் வெளியாகி இருக்கின்றன. இந்தச் சூழ்நிலையில், காவிரியில் நமக்கு உரிய பங்கினை வழங்க காவிரி ஒழுங்காற்றுக் குழு உத்தரவிட்டும், அதனை நிறைவேற்ற முடியாது என்று கர்நாடக மாநில முதல்வர் தெரிவித்துள்ளார். இதுகுறித்து, தமிழ்நாடு முதல்வர் இன்னும் வாய் திறக்காமல் இருக்கிறார்.

அதுமட்டுமல்ல, மேகேதாட்டு விவகாரம் தொடர்பாக ஒரு தீர்ப்பாயம் அமைக்க வேண்டும் என்று சட்டப்பேரவையின் மூலம் வலியுறுத்தி இருக்கின்ற நிலையில், இந்த கர்நாடக பயணம் இதனை நீர்த்துபோகச் செய்யாதா? என்ற கேள்வியும் எழுகிறது.

இப்படி இந்த அரசைப் பொறுத்தவரையில் எந்தத் தகவல்களிலும் தெளிவு இல்லை; எதிலும் வெளிப்படைத்தன்மை இல்லை. எதற்கெடுத்தாலும் குழப்பம்; எல்லாவற்றிலும் ஏமாற்றம். இதுவே இந்த அரசின் வழக்கமாக மாறியிருக்கிறது. தனது திரைப்படம் கர்நாடகாவில் வெளியாவதில் சிக்கல் ஏற்படக் கூடாது என்பதற்காகவே முதல்வர் இதுகுறித்து வெளிப்படையாகப் பேசாமல் அமைதி காப்பதாக ஊடகங்களில் ஓயாமல் செய்திகள் வெளியாகின்றன. அதற்கும் எந்தப் பதிலும் இல்லை.

அனைத்துக் கட்சிக் கூட்டத்தோடு, விவசாயச் சங்கப் பிரதிநிதிகளின் கூட்டத்தையும் கூட்டச் சொல்லி, முதல்வருக்கு ஆதரவு அளிக்கும் கட்சிகள் உட்பட தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு கட்சிகளும், விவசாயச் சங்கங்களும் அரசுக்குக் கோரிக்கை விடுத்தும் அதற்கான எந்த நடவடிக்கையும் எடுக்காமல் அமைதி காத்து வருகிறார்.

மாநிலத்தின் முக்கியப் பிரச்சினையில் யார் குரலையும் கேட்காமல் செயல்பாடற்று இந்த அரசு இருப்பது நல்லதல்ல. அனைத்துக் கட்சிக் கூட்டத்துக்கும் தி.மு.க.தான் அழைப்பு விடுக்க வேண்டும் என முதல்வர் எதிர்பார்க்கிறாரா? அரசால் முடியாது என்றால் சொல்லிவிடுங்கள்; அதற்கும் நாங்கள் தயாராகவே இருக்கிறோம்.

கடந்த ஆண்டு 6.5 லட்சம் ஏக்கரில் குறுவை சாகுபடி நடந்து சாதனை படைத்த நிலையில், இந்த ஆண்டு மேட்டூர் அணை திறக்கப்படாததால் 1.5 லட்சம் ஏக்கர் சாகுபடி மட்டுமே நடப்பதாகச் செய்திகள் வருகிறது. இதனால் 2,500 கோடி ரூபாய் அளவுக்கு இழப்பு ஏற்பட்டு 14 இலட்சம் விவசாயிகளின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுத் தவிக்கிறார்கள். எனவே அவர்களுக்குக் கீழ்க்கண்ட வகையில் தமிழ்நாடு அரசு நிவாரணத் தொகுப்பினைக் காலம் தாழ்த்தாமல் அறிவித்திட வேண்டும்.

1) ஏக்கர் ஒன்றுக்குக் குறுவை நிவாரணமாக 25 ஆயிரம் ரூபாய்.

2) காப்பீட்டுத் திட்டத்துக்கான பிரீமியம் தொகையை அரசே செலுத்தி முழுக் காப்பீடு கிடைக்க உதவி.

3) சம்பா சாகுபடிக்கான மறுமுதலீடாக விதை, உரம், பூச்சிக்கொல்லி என இடுபொருட்கள் மானியமாக வழங்குதல்.

இப்படி, விவசாயப் பெருமக்களின் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தியும், காவிரி உரிமையை நிலைநாட்டுவதில் த.வெ.க. அரசின் மெத்தனப்போக்கைக் கண்டித்தும் வரும் 0308 2026 அன்று காலை 10.00 மணியளவில், தஞ்சாவூர், பனகல் கட்டடம் அருகில் கழக இளைஞரணிச் செயலாளரும், சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் தலைமையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத்த தி.மு.க. முடிவெடுத்துள்ளது.

இப்போராட்டத்தில் காவிரி டெல்டா மாவட்டங்களைச் சேர்ந்த நிர்வாகிகள் அனைவரும் பெருந்திரளாகக் கலந்துகொண்டு விவசாயிகளுக்காகக் குரல் கொடுக்க வேண்டும். மேலும், அனைத்து விவசாயச் சங்கங்களைச் சேர்ந்த தோழர்களும், இவ்விவகாரத்தில் ஒருமித்த கருத்துடைய அனைத்து அரசியல் கட்சிகளின் தோழர்களும் போராட்டத்தில் கலந்துகொண்டு விவசாயிகளின் கோரிக்கைகள் விரைவில் வென்றிடத் துணை நிற்க வேண்டும் என அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இந்தக் கண்டன ஆர்ப்பாட்டம் என்பது, விவசாயிகளின் குரலைக் கேட்காமல் இருக்கும் த.வெ.க. அரசின் கவனத்தை ஈர்க்கும் முதல்கட்ட நடவடிக்கைதான். அரசின் இந்த மெத்தனப்போக்குத் தொடர்ந்தால், மிகப்பெரிய போராட்டத்தைச் சந்திக்க வேண்டியிருக்கும் என்பதையும் எச்சரிக்கையாகத் தெரிவித்துக் கொள்கிறேன்' எனத் தெரிவித்துள்ளார்.

## "கர்நாடக அணைகளை பார்வையிடுமாறு தமிழக முதல்வரிடம் கோரிக்கை வைத்துள்ளேன்"

### முதல்வர் டி.கே.சிவகுமார் பேட்டி

புதுடெல்லி, ஜூலை.31-

கர்நாடக முதல்வர் டி.கே.சிவகுமார் டெல்லியில் நாடாளுமன்ற வளாகத்தில் செய்தியாளர்களிடம் கூறியதாவது: "கர்நாடகாவில் பருவமழை பெய்யாததால் அணைகளில் போதிய அளவுக்கு நீர் இல்லை. கடந்த இரு முறை தமிழகம் நீர் கேட்டபோது, காவிரி ஒழுங்காற்று குழு அவர்களின் கோரிக்கையை நிராகரித்திருந்தது. தற்போது தமிழகத்துக்கு 3500 கன அடி நீர் திறந்துவிடுமாறு உத்தரவிட்டுள்ளது.



இந்த உத்தரவுக்கு எதிராக மேல்முறையீடு செய்வது குறித்து அமைச்சர்கள், அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினேன். அதில் மேல்முறையீடு செய்வதென முடிவெடுத்துள்ளோம். தமிழக அரசின் சார்பில் கர்நாடக அரசின் தலைமைச் செயலாளருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. என்னை விஜய் சந்திக்க விரும்புவதாக தெரிவிக்கப்பட்டிருந்தது. அடுத்த ஓரிரு நாட்களில் விஜய் என்னிடம் தொலைபேசியிலும் பேசினார். தமிழக அரசின் கோரிக்கையை ஏற்று, அவரை மரியாதையுடன் நடத்துவது எனது கடமை.

அதனால் விஜயுடனான சந்திப்புக்கு சம்மதம் தெரிவித்ததுடன், அவர்களுக்குச் சேர வேண்டியதை வழங்குவதாகவும் கூறியுள்ளேன். அவருடனான சந்திப்புக்கு தேவையான அனைத்து ஏற்பாடுகளை செய்யுமாறு உத்தரவிட்டுள்ளேன். காவிரி நதி நீர் விவகாரத்தை பேச்சுவார்த்தை மூலம் தீர்க்க விஜய் விரும்புகிறார்.

கர்நாடகாவில் உள்ள கிருஷ்ண ராஜசாகர், கபினி உள்ளிட்ட அணைகளையும் காவிரி ஆறையும் பார்வையிடுமாறு விஜயிடம் கோரிக்கை வைத்துள்ளேன். அவர் பார்வையிடுவதற்காக ஹெலிகாப்டரைத் தயார் நிலையில் வைத்திருக்கிறேன். அவரே நேரில் பார்த்து எங்களது நீர் நிலைகளின் நிலையை தெரிந்துகொள்ளட்டும். இந்த விவகாரத்தில் அவர் என்ன முடிவெடுப்பார் என பொறுத்திருந்து பார்ப்போம். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

விவசாயிகள் போராட்டம்: இந்நிலையில், காவிரியில் தமிழகத்துக்கு தண்ணீர் திறப்பதை கண்டித்து கர்நாடகாவில் விவசாயிகள், கன்னட அமைப்பினர் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

present sale for
all over Tamil Nadu

தற்பொழுது தமிழகமெங்கும் விற்பனையாகி வருகிறது

## அ.தி.மு.க., எம்.எல்.ஏக்கள் ராஜினாமா விவகாரம்: ஆகஸ்ட் 4 அன்று விளக்கமளிக்க எடப்பாடி பழனிசாமிக்கு சபாநாயகர் அழைப்பு

சென்னை, ஜூலை.31-

ராஜினாமா செய்த அ.தி.மு.க எம்.எல்.ஏக்கள் மீது கட்சி தாவல் தடை சட்டத்தின் நடவடிக்கை எடுக்க கோரிய மனுவில் எடப்பாடி பழனிசாமி இன்று ஆஜராகி விளக்கமளிக்க சபாநாயகர் அழைத்த நிலையில், தற்போது அந்த சந்திப்பு ஆகஸ்ட் 4ஆம் தேதிக்கு மாற்றப்பட்டுள்ளது.



அ.தி.மு.கவைச் சேர்ந்த சத்தியபாமா, ஜெயக்குமார், மரகதம் குமரவேல், இசக்கி சுப்பையா ஆகியோர் தங்களது சட்டமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்துவிட்டு தமிழக வெற்றிக் கழகத்தில் இணைந்தனர். இதையடுத்து, கட்சி மாறுதல் சட்டத்தின் கீழ் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி, சபாநாயகர் ஜே.சி.டி. பிரபாகரிடம் மனு அளித்திருந்தார்.

இந்த மனு தொடர்பாக, தமிழ்நாடு சட்டப்பேரவைச் செயலர் சாந்தி, எடப்பாடி பழனிசாமிக்கு கடிதம் எழுதியிருந்தார். அதில், முன்னாள் எம்எல்ஏக்கள் அளித்த விளக்கங்கள் மீது கூடுதல் தெளிவு தேவைப்பட்டதால், 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் (கட்சி மாறுதல் காரணமாக தகுதியின்மையாக்குதல்) விதிகள் 7(7)ன் கீழ் சபாநாயகர் நேரில் விளக்கம் கேட்டதாக தெரிவிக்கப்பட்டது.

அதன்படி, இசக்கி சுப்பையா ஜூலை 3ஆம் தேதியும், சத்தியபாமா, ஜெயக்குமார் மற்றும் மரகதம் குமரவேல் ஆகியோர் ஜூலை 9ஆம் தேதியும் சபாநாயகர் முன் ஆஜராகி தங்களது தரப்பு விளக்கங்களை அளித்துள்ளனர்.

அவர்கள் அளித்த விளக்கங்கள், செயலரகத்தின் பதிவுகள் மற்றும் இருதரப்பினரும் அனுப்பிய கடிதங்கள் ஆகியவற்றின் அடிப்படையில், மேலும் சில விளக்கங்கள் தேவைப்படுவதாக சபாநாயகர் கருதினார். இதனால் முன்னாள் எம்.எல்.ஏக்களையும், மனுதாரரான எடப்பாடி பழனிசாமியையும் ஒரே நேரத்தில் நேரில் ஆஜராகி, தங்களது தரப்பு விளக்கங்களை வழங்குமாறு சட்டப்பேரவைச் செயலகம் கேட்டுக்கொண்டது.

அதன்படி, (ஜூலை 30) அன்று விளக்கம் கேட்கும் சந்திப்பு நடைபெறவிருந்தது. இந்நிலையில், இந்த சந்திப்பு தற்போது ஆகஸ்ட் 4ஆம் தேதிக்கு மாற்றப்பட்டுள்ளது.

ஆகஸ்ட் 4ஆம் தேதி நடைபெற உள்ள இந்த சந்திப்பில், எடப்பாடி பழனிசாமி மற்றும் முன்னாள் எம்.எல்.ஏக்கள் நேரில் ஆஜராகி தங்களது தரப்பு விளக்கங்களை அளிக்குமாறு சட்டப் பேரவைச் செயலகம் கேட்டுக்கொண்டுள்ளது.

ஒவ்வொரு முன்னாள் எம்.எல்.ஏவிடமும் சுமார் 30 நிமிடங்கள் விளக்கம் கேட்கப்பட உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. வரும் ஆகஸ்ட் 5ஆம் தேதி தமிழ்நாடு சட்டப்பேரவையின் பட்ஜெட் கூட்டத்தொடர் தொடங்கவுள்ள நிலையில், இந்த விவகாரத்தில் சபாநாயகர் ஜே.சி.டி. பிரபாகரின் அடுத்தகட்ட நடவடிக்கை அரசியல் வட்டாரங்களில் முக்கியத்துவம் வாய்ந்ததாக பார்க்கப்படுகிறது.

## "அறநிலையத்துறையின் அனைத்து டெண்டர்களும் இனி ஆன்லைன் முறையில் நடைபெறும்"

சென்னை, ஜூலை.31-

"அறநிலையத்துறையின் அனைத்து டெண்டர்களும் இனி ஆன்லைன் முறையிலேயே நடைபெறும்'' என அறநிலையத்துறை அமைச்சர் ரமேஷ் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் செய்தியாளர்களிடம் கூறுகையில், "அறநிலையத்துறையின் அனைத்து டெண்டர்களும் இனி ஆன்லைன் முறையிலேயே நடைபெறும். கோயில்களின் கார் பார்க்கிங் வசதிகளில் இனி டிஜிட்டல் முறையில் பில் வழங்கப்படும்.

பார்க்கிங், மொட்டை போடுதல், கடைகள் அமைப்பது உள்ளிட்டவற்றுக்கு பொதுவான டெண்டர் முறை கொண்டுவரப்பட்டுள்ளது. அனைத்து டெண்டர்களுக்கும் ஜிஎஸ்டி, பான் கட்டாயம் ஆக்கப் பட்டுள்ளது. அனைவருக்கும் வாய்ப்பு கிடைக்க வேண்டும் என்ற



நோக்கில் டெண்டர் முறை முன்னெடுக்கப்படுகிறது. டெண்டர் சம்மந்தப்பட்ட விவகாரத்தில் அனைத்து கோயில்களுக்கும் ஒரே மாதிரியான உறுதிமொழி படிவங்கள் தமிழ், ஆங்கிலத்தில் கொண்டு வரப்பட்டுள்ளது.

பழநி விவகாரம் குறித்து தீவிர விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. இந்த வழக்கை சிபிசிஐடிக்கு மாற்ற வேண்டும் என முதல்வரிடம் கூறினேன்; அவரும் அதை சிபிசிஐடிக்கு மாற்றினார். தற்போது 4 பேர் கைது செய்யப் பட்டுள்ளனர். இதில் சம்மந்தப்பட்டவர்கள் மீது, பாரபட்சமின்றி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதிமுக ஐடி விங்கில் உள்ளவர்கள், என் மீது பொய் பரப்பிக் கொண்டிருக்கிறார்கள்.

என் குடும்பத்தில் யாருக்குமே 2 கோடி ரூபாய் பணம் கிடையாது. நாங்களே வாடகை வீட்டில் வசிக்கிறோம். அவர்கள் எனது பெயர், புகழை கெடுக்க இப்படி செய்கின்றனர். பழநி விவகாரத்தில் அரசியல் காரணங்களுக்காக என் மீது குற்றச்சாட்டு வைக்கப்படுகிறது" இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



## ஆத்துப்பாக்கம் ஊராட்சி மகளிர் குழு பெண்களிடம் 2,00,000 லட்சம் கேட்டு மிரட்டும் திமுக ஒன்றிய பிரமுகர்

திருவள்ளூர் , ஜூலை.31-

திருவள்ளூர் மாவட்டம் ஆத்துப்பாக்கம் ஊராட்சிக்கு சொந்தமான பெரியபாளயம் பவானி அம்மன் கோவில் அருகில் கட்டப்பட்ட மகளீர் சுயஉதவி குழு பொது சுகாதார காழிப்பிட வளாகத்தின் சாவியை இரண்டு லட்சம் கொடுத்தால் தான் சாவி கொடுப்பேன் என மகளீர் சுய உதவி குழு பெண்களை அப்பகுதி ஒன்றிய திமுக பிரமுகர் மிரட்டுவதாக கூறப்படுகிறது அப்பகுதி ஒன்றிய திமுக பிரமுகரிடமிருந்து மகளீர் சுகாதார கழிப்பிட வளாகத்தின் சாவியை மீட்டு தர கோரி 21 மகளீர் சுய உதவி குழுவை சேர்ந்த உறுப்பினர்கள் மாவட்ட ஊரக வளர்ச்சி திட்ட முகமை இயக்குனரிடம் மனு அளித்துள்ளதாக சொல்லப்படுகிறது இம்மனுவை பொற்றுக்கொண்ட மாவட்ட திட்ட இயக்குனர் இது சம்மந்தமாகஉரிய விசாரணை நடத்தி வளாகத்தின்சாவியை மகளீர் குழுவினரிடம் ஒப்படைப்பதாக கூறிவுனார் என கூறப்படுகிறது கடந்த மூன்று வாரங்களாக வளாகத்தின்சாவி கோட்டு போராடும் மகளீர் சுய உதவி குழு பெண்களின் கோரிக்கை நிறைவேறுமா?????? அப்பகுதி சமுக ஆர்வலர்கள் எதிர் பார்ப்பு

## கிருஷ்ணகிரி அருகேஅம்பா பவானி தேவி கோயில் கும்பாபிஷேகம்

கிருஷ்ணகிரி, ஜூலை.31-

கிருஷ்ணகிரி அருகே அம்பா பவானி தேவி கோயில் கும்பாபிஷேகம் நேற்று நடந்தது.கிருஷ்ணகிரி அருகே உள்ள அக்ரஹாரம் சிவாஜி நகரில் அமைந்துள்ள அம்பா பவானி தேவி கோயில் மகா கும்பாபிஷேகம் நேற்று நடந்தது. இதையொட்டி, கடந்த 26ம் தேதி காலை, பாகவநாம சங்கீர்த்தனையும், மாலை நாம சங்கீர்த்தனமும் நடந்தது. நேற்று காலை, கணபதி ஹோமம், நவகிரஹ ஹோமம், சண்டி ஹோமம், துர்கா சப்தசதி பாராயணம், கும்கும அர்ச்சனையும் நடந்தது. தொடர்ந்து, மஹா பூர்ணா ஹூதி, கலச புறப்பாடும், விநாயகர், விட்டல் ரகுமாயி, அம்பா பவானி, நவகிரஹம் ஆகிய கோயுல் சுவாமிகளுக்கு கோபுர கலசத்தில் புனித நீர் ஊற்றி மஹா கும்பாபிஷேகம் நடந்தது. தொடர்ந்து, அம்பா பவானி தேவிக்கு அபிஷேகம், சிறப்பு அலங்காரம்





மற்றும் பூஜைகள் நடந்தது. பக்தர்களுக்கு தீர்த்தப் பிரசாதம் வழங்கப்பட்டன. இதில் தமிழ்நாடு மட்டுமின்றி கர்நாடகா, ஆந்திரா மாநிலத்தில் இருந்தும் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர். அனைவருக்கும் அன்ன தானம் வழங்கப்பட்டன. இன்று (30ம் தேதி) காலை, ருக்மணி திருக்கல்யாணம் வெகு விமர்சையாக நடக்க உள்ளது. மாலை 6 மணிக்கு, உற்சவ மூர்த்திகள் கிருஷ்ணகிரி நகரில் வலம் வந்து பக்தர்களுக்கு அருள் பாலிக்க உள்ளனர்.



## கிருஷ்ணகிரியில்முன்னாள் படைவீரர்கள் வீர மங்கையர் நல சங்கம் சார்பில்கார்கில் போர் வெற்றியின் 27ம் ஆண்டு நினைவு அஞ்சலி

கிருஷ்ணகிரி, ஜூலை.31-

கிருஷ்ணகிரியில் முன்னாள் படைவீரர்கள் வீர மங்கயைர் நல சங்கம் சார்பில் கார்கில் போலில் வெற்றியின் 27ம் ஆண்டு நினைவு அஞ்சலி நிகழ்ச்சி நடந்தது.கிருஷ்ணகிரியில், முன்னாள் முப்படை ராணுவ வீரர்கள் மற்றும் துணை ராணுவ வீரர்கள் வீர மங்கையர் நல சங்கம் சார்பில், கார்கில் போர் வெற்றியின் 27வது ஆண்டு நினைவு அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி நேற்று நடந்தது. சங்கத்தின் தலைவர் கேப்டன் தேவராஜ் தலைமை வகித்தார். இதில் சிறப்பு அழைப்பாளர்களாக, பிரிகேடியர்கள் (ஓய்வு) சுதந்திரம், முனிசாமி, கர்னல் சீனிவாசன், சேலம் விம்ஸ் மருத்துவமனை நிர்வாகி அருள்மணி, இ.சி.எச்.எஸ்., பொறுப்பு அதிகாரி கர்னல் பூலையா தாஸ் மற்றும் சோல்ஜர் போர்டு உறுப்பினர்கள், சங்கத்தின் கிளை தலைவர்கள், செயலாளர்கள், மாவட்ட சங்க நிர்வாகிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.நிகழ்ச்சியில், பிரிகேடியர்கள், கேப்டன்கள் என பலரும் கார்கில் போரியில் உயிரிழந்தவர்களுக்கு மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர். பின்னர் போரில் இறந்தவர்களுக்கு 2 நிமிடம் மவுன அஞ்சலி செலுத்தப்பட்டது.

## குன்னூர் நகராட்சி கூட்டத்தில் நகர்மன்ற உறுப்பினர்கள் பொது மக்களுக்கு தேவைப்படும் பணிகளை கூறியும், எவ்வித பதில் அளிக்காமல் இருந்த குன்னூர் நகராட்சி ஆணையாளர்

நீலகிரி, ஜூலை.31-

குன்னூர் நகராட்சி மன்ற கூட்டம் நடைபெற்றது. நகராட்சித் தலைவர் சுசிலா, துணைத் தலைவர் வாசிம் ராஜா மற்றும் நகராட்சி ஆணையாளர் கிருஷ்ணராம் ஆகியோர் முன்னிலையில் இக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் கலந்து கொண்ட வார்டு உறுப்பினர்கள் தங்களது பகுதிகளில் நிலவும் குடிநீர், சாக்கடை மற்றும் சாலை வசதிகள் உள்ளிட்ட அடிப்படைப் பிரச்சினைகள் குறித்து காரசாரமாக விவாதித்தனர். அப்போது, கவுன்சிலர்கள் முன்வைக்கும் கோரிக்கைகளுக்கு ஆணையாளர் முறையான பதிலளிக்காமல், "செய்து தருகிறேன், பண்ணிக்கலாம்" என்று கூறி மௌனம் சாதிப்பதாகக் கூறி



கவுன்சிலர்கள் மிகுந்த அதிருப்தி அடைந்தனர். மாதத்தில் ஒரு நாள் மட்டுமே கூடும் இந்த மாதாந்திர கூட்டத்தில் அடிப்படைப் பிரச்சினைகளைப் பற்றி விவாதிக்க மட்டுமே நேரம் போதுமானதாக இருக்கிறது. ஆனால், தற்போதைய ஆணையாளர் பொறுப்பேற்றதில் இருந்து எந்தவொரு வளர்ச்சிப் பணிகளும் மேற்கொள்ளப்படவில்லை என்று அனைத்துக் கட்சி கவுன்சிலர்களும் குற்றம்சாட்டினர். கூட்டத்தில் தலைவர்கள் முன்னிலையில் கவுன்சிலர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு ஆணையாளர் செவிசாய்க்காததால் மன்றத்தில் பரபரப்பு ஏற்பட்டது. இதனால் அதிருப்தியடைந்த நகராட்சி துணைத் தலைவர் வாசிம் ராஜா, திடீரென மேடையில் இருந்து கீழே இறங்கி வந்து, "தயவுசெய்து எங்கள் வார்டு பிரச்சினை களுக்கு உரிய தீர்வு காணுங்கள்" என ஆணையாளரிடம் முறையிட்டார்.கடந்த 10 நாட்களுக்கு முன்பு குடிநீர் விநியோகம் செய்து வந்த நகராட்சி அரசு ஊழியரை, சேர்ந்த ஒருவர் தாக்கியதாகக் கூறப்படுகிறது. இந்தச் சம்பவம் குறித்து நகராட்சி நிர்வாகம் சார்பில் இதுவரை எந்தவொரு சட்டப்பூர்வ நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என கவுன்சிலர்கள் சுட்டிக்காட்டினர். மேலும், தாக்குதலில் ஈடுபட்ட அந்த நபர் நகராட்சிக்குச் சொந்தமான பார்க்கிங்கை குத்தகைக்கு எடுத்திருப்பதால், நகராட்சி ஊழியரையே தாக்கிய அந்த நபரின் பார்க்கிங் உரிமத்தை உடனடியாக ரத்து செய்ய வேண்டும் என்றும், அவருக்கு இனி பார்க்கிங் ஏலம் விடக்கூடாது என்றும் அனைத்து கவுன்சிலர்களும் கூட்டாக வலியுறுத்தினர்.



■ கிருஷ்ணகிரி அரசு ஆடவர் கலைக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வரும் 32 வது அகில இந்திய மாங்கனி கண்காட்சியில் நடைபெற்ற மாங்கனி சமையல் போட்டியில் வெற்றிபெற்ற 20 நபர்களுக்கு பரிசுகளை தொழில் துறை அமைச்சர் செல்வி.ச.கீர்த்தனா, மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார், கிருஷ்ணகிரி சட்டமன்ற உறுப்பினர் முகுந்தன் ஆகியோர் முன்னிலையில் 29.07.2026 அன்று வழங்கினார். உடன், வேளாண்மைத்துறை இணை இயக்குநர் (பொ) செல்வி.கா.உமா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) பா.ஏஞ்சலின் பொன்ராணி உள்ளிட்ட பலர் உள்ளனர்.



■ நீலகிரி மாவட்டம் உதகை நகராட்சி, மத்திய பேருந்து நிலையத்தில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த தமிழக அரசின் சாதனை விளக்கப்புகைப்படக்கண்காட்சியினை ஏராளமான பொதுமக்கள் பார்வையிட்டு அரசின் சாதனைகள் மற்றும் திட்டங்கள் குறித்து தெரிந்து கொண்டனர்.



■ கிருஷ்ணகிரி அரசு ஆடவர் கலைக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வரும் 32 வது அகில இந்திய மாங்கனி கண்காட்சியில், தோட்டக்கலைத்துறை சார்பாக அமைக்கப்பட்டுள்ள அரங்குகளை தொழில் துறை அமைச்சர் செல்வி.ச.கீர்த்தனா, மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார், கிருஷ்ணகிரி சட்டமன்ற உறுப்பினர் முகுந்தன் ஆகியோர் முன்னிலையில் 29.07.2026 அன்று பார்வையிட்டார். உடன், தோட்டக்கலைத்துறை இணை இயக்குநர் (பொ) குணவதி உள்ளிட்ட பலர் உள்ளனர்.



■ தேனி நகர்ப் பகுதி கடை வீதியில் திருமதி. பசுபதியம்மாள் (வயது 60) பழக்கடை வைத்து வியாபாரம் செய்து வருகிறார். இவரிடம் தேனி நகரைச் சேர்ந்த திருமதி.செல்வி (வயது 50) பழங்கள் வாங்கிக்கொண்டு செல்லும் பொழுது தனது மணிபர்சை விட்டுவிட்டு சென்று விடுகிறார். இதில் 32,240 ரூபாய் மற்றும் ஏடிஎம் கார்டு, ஆதார் அட்டை உள்ளிட்டவை இருந்ததை பழக்கடை வைத்துள்ள பசுபதியம்மாள் பார்த்து பத்திரமாக எடுத்து வைத்தார். ஆனால், தவறவிட்ட நபரை உடனடியாக தேடியும் கண்டுபிடிக்க முடியவில்லை. பத்து தினங்களாக ஆதார்கார்டு முகவரியை வைத்து தொடர்ந்து தேடியதுடன் பசுபதியம்மாள் அவர்களின் தம்பி.முருகன் (அரசு வாகன ஓட்டுநர்) , மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்திலுள்ள, ஆதார் மையம் மூலம் .செல்வி என்பவரின் முகவரியைக் கண்டறிந்து, அவருடைய பணம் என்பதை உறுதிசெய்து மாவட்ட ஆட்சித்தலைவர் , இருவரும் வந்திருந்து பணம் தவறவிட்டவரிடம் ஒப்படைக்கப்பட்டது. பணத்தை பத்திரமாக எடுத்து ஒப்படைத்த .பசுபதியம்மாள் மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், பொன்னாடை அணிவித்து அவரின் நேர்மையை பாராட்டி வாழ்த்தினார்.

## தேனி மாவட்டம்கம்பம் நகராட்சியில் ரூ.9.82 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் வளர்ச்சி திட்டப் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், பார்வையிட்டு ஆய்வு

கம்பம், ஜூலை.31-

தேனி மாவட்டம், கம்பம் நகராட்சியில் நகராட்சித் துறையின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித்திட்ட பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.இந்த ஆய்வின் போது, மாவட்ட ஆட்சித்தலைவர் கம்பம் நகராட்சிப் பகுதியில் உள்ள விவேகானந்தர் தெருவில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ், குடிநீர் குழாய் பதிக்கும் பணி நடைபெற்று வருவதைப் பார்வையிட்டு பணிகள் குறித்து கேட்டறிந்தார். மேலும், இத்திட்டத்தில் நகராட்சி பகுதியில் ரூபாய் 9 கோடியே 15 இலட்சம் மதிப்பீட்டில் 34.6 கி.மீ. அளவிற்கு குடிநீர் இணைப்புக்கான பகிர்மானக் குழாய் பதிக்கும் பணி நடைபெற்று வருவதாக அலுவலர்கள் தெரிவித்தார்கள். அதனைத் தொடர்ந்து,



மாவட்ட ஆட்சித்தலைவர் பணிகளை காலதாமதமின்றி விரைந்து முடிக்க அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.பின்னர், திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ், குப்பைகள் தரம் பிரித்து நுண் உரம் தயாரிக்கும் நிலையத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் பார்வையிட்டு அங்கு குப்பைகள் தரம் பிரித்து திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் நுண் உரம் தயாரிக்கும் பணிகள் நடைபெற்று வருவதை பார்வையிட்டதுடன் அங்கு பணியாற்றும் பணியாளர்கள் உரிய பாதுகாப்பு உபகரணங்களை பயன்படுத்தி பணியாற்ற வேண்டும் என அறிவுறுத்தினார். மேலும், இவ்வளாகத்தில் ரூ.57 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டு வரும் நுண் உர செயலாக்க கட்டிடத்தை பார்வையிட்டு பணியின் தன்மைகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் கேட்டறிந்தார்.அதனைத் தொடர்ந்து, கம்பம் அரசு தலைமை மருத்துவமனைக்குச் சென்று உள் நோயாளிகள் பிரிவு, வெளி நோயாளிகள் பிரிவு பகுதிகளை பார்வையிட்டு உள்நோயாளிகளுக்கு வழங்கப்பட்டு வரும் சிகிச்சைகளின் விபரம் குறித்தும், நாள்தோறும் சிகிச்சை பெற வருபவர்களின் விபரம் குறித்தும் பதிவேடுகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள். அதனைத் தொடர்ந்து, அம்மா உணவகத்திற்குச் சென்று நாள்தோறும் பொதுமக்களுக்கு வழங்கி வரும் உணவுகளின் தரம் குறித்து கேட்டறிந்ததுடன், நகராட்சி நிர்வாகம் மூலம் நல்லமுறையில் பராமரித்திட வேண்டுமென அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், அறிவுறுத்தினார்.இந்த ஆய்வில் கம்பம் நகராட்சி ஆணையர் .உமாசங்கர், உதவி பொறியாளர் .சந்தோஷ்குமார், சுகாதார ஆய்வாளர்.மகாசங்கர் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



## நடை ரோந்து (Foot Patrolling) மூலம் குற்றங்கள் நடைபெறா வண்ணம் கண்காணிக்கும்

தேனி, ஜூலை.31-

தேனி மாவட்ட காவல்துறையினர்.பொது மக்களின் பாதுகாப்பை உறுதி செய்யவும், குற்றச் செயல்களைத் தடுக்கும் நோக்கிலும் தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் K.S.பிரவீன் கௌதம் உத்தரவின் பேரில், தேனி மாவட்ட காவல்துறையினர் தீவிர நடை ரோந்து (Foot Patrolling) பணியில் ஈடுபட்டு வருகின்றனர். மக்கள் அதிகம் கூடும் இடங்கள், வணிக வளாகங்கள், பேருந்து நிலையங்கள், குடியிருப்பு பகுதிகள் மற்றும் முக்கிய சாலைகளில் காவல்துறையினர் தொடர்ந்து கண்காணிப்பு மேற்கொண்டு வருகின்றனர். இந்த நடை ரோந்து பணியின் மூலம் திருட்டு, வழிப்பறி, சமூக விரோத செயல்கள் உள்ளிட்ட குற்றங்களை முன்கூட்டியே தடுத்து, சட்டம் மற்றும் ஒழுங்கை பராமரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## செங்குன்றத்தில் கொரியர் சேவை நிறுவன நிர்வாகிளுடன் பாதுகாப்பு விழிப்புணர்வு கூட்டம்

மாதவரம், ஜூலை.31-

மாதவரம் தொகுதி செங்குன்றம் அருகே உள்ள தனியிர் திருமண மண்டபத்தில் ஆவடி காவல் ஆணையரகம் செங்குன்றம் காவல் மாவட்டத்திற்குட்பட்ட கொரியர் சேவை நிறுவன நிர்வாகிளுடன் பாதுகாப்பு மற்றும் விழிப்புணர்வு கூட்டம் ஆவடி காவல் ஆணையாளர் செந்தில்குமார் ஆணைக்கிணங்க, இணை ஆணையாளர் மருத்துவர் ஆர்.சிவகுமார், செங்குன்றம் காவல் மாவட்ட துணை ஆணையாளர் மகேஸ்வரி ஆகியோர் அறிவுறுத்தலின் பேரில் செங்குன்றம் காவல் சட்ட ஒழுங்கு ஆய்வாளர் கிருஷ்ணமூர்த்தி ஏற்பாட்டில் செங்குன்றம் காவல் சரக உதவி ஆணையர் பிராங்க்டிரூபன் தலைமையில் நடைபெற்றது.கூட்டத்தில்



மும்பையிலிருந்து ஒரு சிலருக்கு அடிக்கடி போதை மாத்திரைகள், வலி நிவாரணி மாத்திரைகள் பார்சலில் வருவதாக தெரிய வருகின்றது. அதை கண்காணித்து போதைப் பொருள்கள் தமிழ்நாட்டில் நுழைய விட கூடாது என்று பல்வேறு முயற்சிகளை டிஜிபி அவர்கள் எடுத்து வருகின்றார். அதன் ஒருபகுதியாக இங்கு வருகை தந்துள்ள அனைவரும் சந்தேகப்படியான பார்சல், போதைப் பொருள்கள் எதுவும் பார்சலில் வருகின்றதா என்பதை கண்காணிக்க வேண்டும். அவ்வாறு சந்தேகப்படியான பார்சல்கள் எதுவும் வந்தால் உடனடியாக அருகில் உள்ள காவல்நிலையத்தில் தகவல் தெரிவிக்க வேண்டுமென்றும், சந்தேகப்படியான நபர்களுக்கு அடிக்கடி பார்சல்கள் வந்தால் அது குறித்தும் தகவல் தெரிவிக்குமாறும் கேட்டுக் கொண்டார்.இதில் காவல் ஆய்வாளர்கள் மணலி புதுநகர் புருசோத்தமன், திருப்பாலைவனம் அகிலன்ராஜ், காட்டூர் தங்க விஜயகுமார், பொன்னேரி மகளிர் காவல் நிலைய ஆய்வாளர் ஜானகி தேவி மற்றும் உதவி ஆய்வாளர்கற், காவலர்கள் கலந்துகொ ண்டனர்.மேலும் இக்கூட்டத்தில் செங்குன்றம் காவல் மாவட்டத்திற்குட்பட்ட செங்குன்றம், சோழவரம், பொன்னேரி, மணலி, மீஞ்சூர், காட்டூர், மணலி புதுநகர் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள கொரியர் பார்சல் சர்வீஸ் நிறுவன நிர்வாகிகள் 100க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு தங்களது கருத்துகளை பரிமாறிக் கொண்டனர். முடிவில்செங்குன்றம் குற்றவியல் ஆய்வாளர் பரிபூரணம் அனைவருக்கும் நன்றி கூறினார்.





■ உலக புலிகள் தினத்தை முன்னிட்டு நீலகிரி மாவட்டம் முதுமலை புலிகள் காப்பகம் மசினகுடி கோட்டத்தின் சார்பாக மசினகுடி, பொக்காபுரம் மற்றும் மாவநல்லா கிராமங்களில் உள்ள பள்ளி குழந்தைகளை கொண்டு மசினகுடி பெட்ரோல் பங்க் முதல் மசினகுடி வன சோதனை சாவடி வரை விழிப்புணர்வு பேரணி நடத்தப்பட்டது, தொடர்ச்சியாக வன விலங்குகள் நடமாட்டம் உள்ள பகுதிகளில் கொட்டப்பட்ட குப்பைகளை தூய்மை காவலர்கள் மற்றும் பொதுமக்களை கொண்டு சுத்தம் செய்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.பின்பு பள்ளி மாணவ மாணவியர்களுக்கு "புலிகள் பாதுகாப்பு" என்ற தலைப்பில் ஓவிய போட்டி மாவநல்லா பழங்குடியின உண்டு உறைவிட பள்ளியில் நடத்தப்பட்டது .

## தமிழகம்புதுச்சேரியில்தொடங்க இருந்த கோழி இறைச்சி வணிகர்களின் போராட்டம் வாபஸ்

சென்னை, ஜூலை.31-

தமிழகம் புதுச்சேரியில் தொடங்க இருந்த கோழி இறைச்சி வணிகர்களின் போராட்டம் வாபஸ் பெற்றனர். கறிக்கோழி ஒருங்கிணைப்பு குழுவின் உத்தரவாத அடிப்படையில் போராட்டத்தை வாபஸ் கோழிக்கறி



வணிகர்கள் பெற்றனர். தீவன கட்டுப்பாட்டு நெறிமுறைகளை அமல்படுத்த வலியுறுத்தி போராட்டம் அறிவித்திருந்த நிலையில் வாபஸ் கோழிக்கறி வணிகர்கள் பெற்றுள்ளனர்.



■ திருப்பத்தூர் மாவட்டம் ஜோலார்பேட்டையில் இயங்கி வரும் யூனிவர்சல் பள்ளியின் நிறுவனர் சிவப்பிரகாசம் அவர் 35 வருடமாக கிராமப்புற மாணவ மாணவியர்களுக்கு தரமான கல்வியை வழங்கியதற்காக டைம்ஸ் ஆப் இந்தியா வழங்கிய கல்வி சேவை வாழ்நாள் சாதனையாளர் விருதுனை தமிழ்நாடு செய்தி விளம்பரம் தமிழ் வளர்ச்சித் துறை மற்றும் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் ராஜ்மோகன் வழங்கினார். விருதினை பெற்று திருப்பத்தூர் மாவட்டத்திற்கு பெருமை சேர்த்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது

## ஆயக்குடி பேரூராட்சி அலுவலகத்தை முற்றுகை யிட்ட விசிக கவுன்சிலர் மற்றும் பொதுமக்கள்

திண்டுக்கல், ஜூலை.31-

திண்டுக்கல் மாவட்டம் பழனி அருகே உள்ள ஆயக்குடி பேரூராட்சிக்கு உட்பட்ட 16வது வார்டு பகுதியில் அமைக்கப்பட்டுள்ள குப்பை கிடங்கினால் அப்பகுதியில் வசிக்கும் மக்களுக்கு டெங்கு மலேரியா உள்ளிட்ட பல்வேறு நோய் தொற்றுகள் ஏற்பட்டு வருகின்றன...இந்நிலையில் குப்பை கிடங்கு வேறு இடத்திற்கு மாற்றம் செய்ய வேண்டும் என்று அப்பகுதி விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் கவுன்சிலர் சரஸ்வதி வாஞ்சிநாதன் தலைமையில் பேரூராட்சி அலுவலரிடம் 20க்கும் மேற்பட்ட முறை மனுக்கள் அளிக்கப்பட்டுள்ளனர். ஆனாலும் இதுவரை எவ்வித பயணம் ஏற்படவில்லை. இதனை தொடர்ந்து 16வது வார்டு பகுதியில் உள்ள 50க்கும் மேற்பட்ட பொதுமக்களை திரட்டி ஆயக்குடி பேரூராட்சி



அலுவலகத்தை முற்றுகையிட்டனர். தொடர்ந்து கவுன்சிலரிடம் பேரூராட்சி அதிகாரிகள் தலைமையில் பேச்சுவார்த்தை நடைபெற்றன. மேலும் பத்திரிக்கையாளர் சந்திப்பு நிகழ்ச்சியில் ஆயக்குடி பேரூராட்சி அலுவலகத்தில் வேலை செய்யும் அதிகாரிகள் முறையான நேரத்துக்கு வருவதில்லை.

தொடர்ந்து செயல் அலுவலர் இல்லாததால் முறையான நிர்வாகம் நடைபெறுவதில்லை. பேரூராட்சிக்கு உட்பட்ட 18 வார்டுகளிலும் பொதுமக்களுக்கான வேலைகள் எதுவும் செய்வதில்லை. கடந்த ஆட்சியில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பூமிபூஜை நடைபெற்ற திட்டங்கள் அனைத்தும் முடங்கிக் கிடக்கின்றன.. பேரூராட்சி செயல் அலுவலர் தலைமையில் நடைபெறும் கூட்டங்கள் எதுவும் நடத்தப்படுவதில்லை. தொடர்ந்து பொதுமக்கள் வசிக்கும் பகுதிகளில் எவ்வித சுகாதார வசதிகளும் பேரூராட்சி நிர்வாகத்தால் செய்து கொடுக்கப்படவில்லை. எனவே மாவட்ட நிர்வாகம் உடனடியாக பேரூராட்சி நிர்வாகிகள் மீது விசாரணை நடத்தப்பட வேண்டும் பொது மக்களுக்கான பொது வேலைகள் அனைத்தும் தொடங்கப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டன..

## வைகை அணையின் உட்பகுதிக்குச் சென்று மாவட்ட ஆட்சியர் திடீர் ஆய்வு

ஆண்டிபட்டி, ஜூலை.31-

தேனி மாவட்டம் ஆண்டிபட்டி, வைகை அணையில் உள்ள உட்ப குதியில் அனுமதியின்றி சட்ட விரோதமாக மோட்டார் மூலம் தண்ணீர் எடுத்துச் செல்வதாக புகார் வந்ததன் அடிப்படையில் மாவட்ட ஆட்சித் தலைவர் மரு.இரா.வைத்தி நாதன்,வைகை அணையின் உட்பகுதிக்குச் சென்று திடீர் ஆய்வு செய்த பொழுது புட்வால்வு பொருத்தப்பட்ட 45 பைப்புகள் மூலம் தண்ணீர் கொண்டு செல்வதையும் மற்றும் 3 மின் மோட்டார்கள் மூலம் தண்ணீர் எடுப்பதும்



கண்டறியப்பட்டு உடனடியாக அனைத்துப் பொருட்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதுஇதே போல், அணையின் உட்பகுதியில் அனைத்து இடங்களிலும் ஆய்வு செய்து சட்டவிரோதமாக தண்ணீர் எடுப்பது கண்டறியப்பட்டால் அவர்கள் மீது நடவடிக்கை எடுத்திடவும், மேலும் கண்காணிப்பு பணிகளில் அலுவலர்கள் ஈடுபட்டு இதுபோன்று தவறு செய்பவர்களை கண்டறிந்து கடும் நடவடிக்கை எடுக்கவும் மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், உத்தரவிட்டுள்ளார்கள்.




## பவானிசாகர் அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு

ஈரோடு, ஜூலை.31-

பவானிசாகர் அணைக்கு விநாடிக்கு 29 கனஅடியில் இருந்து 700 கனஅடியாக நீர்வரத்து அதிகரித்துள்ளது. அணையின் நீர்பிடிப்பு பகுதிகளில் பெய்த மழையின் காரணமாக நீர்வாத்து உயர்ந்துள்ளது



■ திருப்பத்தூர் மாவட்டம், ஆலங்காயம் ஊராட்சி ஒன்றியம், நிம்மியம்பட்டு ஊராட்சியில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையின் சார்பில், வளர்ச்சியடைந்த பாரதம் கிராம வேலை உறுதி மற்றும் வாழ்வாதார திட்டத்தின்கீழ் (VB GRAMG), அமைக்கப்பட்டுள்ள நாற்றங்கால் பண்ணையினை மாவட்ட ஆட்சியர் கு.ரவிகுமார்,இ.ஆ.ப., (29.07.2026) அன்று நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார். உடன் நிம்மியம்பட்டு ஊராட்சி மன்ற தலைவர் எழிலரசி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சூரவேல், பாலமுருகன் மற்றும் தொடர்புடைய துறை அலுவலர்கள் உள்ளனர்

## சட்டத்தை இயற்ற கோரி திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக நுழைவாயிலில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்

திருப்பத்தூர், ஜூலை.31-

திருப்பத்தூர் மாவட்டம் திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக நுழைவாயிலில் திருப்பத்தூர் பிரஸ் கிளப், தமிழ்நாடு உழைக்கும் பத்திரிக்கையாளர் சங்கம், தென்னிந்திய பத்திரிக்கையாளர்கள் யூனியன், தமிழ்நாடு ரிப்போர்ட்டர் சங்கம், திருப்பத்தூர் மீடியா டிரஸ்ட் சார்பில் தமிழ்நாட்டில் தொடர்ந்து பத்திரிக்கையாளர்கள் மீது தாக்குதல் நடத்துவதை கண்டித்தும் மற்றும் பத்திரிகையாளர்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் வகையில் வருகின்ற தமிழ்நாடு சட்டமன்ற கூட்டத்தொடரில் பத்திரிகையாளர்கள்




பாதுகாப்பு சட்டத்தை இயற்ற கோரி மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் திருப்பத்தூர் பிரஸ் கிளப் தலைவர் வெங்கடேசன் தலைமையில் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்திற்கு திருப்பத்தூர் பிரஸ் கிளப் ஒருங்கிணைப்பாளர் முனீர் பீரான், பொருளாளர் அலாவுதீன், துணைத் தலைவர் அருண்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். திருப்பத்தூர் மீடியா டிரஸ்ட் செயலாளர் சதீஷ் குமார் வரவேற்புரை ஆற்றினார், தமிழ்நாடு உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம் மாவட்டத் தலைவர் வினாயகமூர்த்தி, மாவட்ட செயலாளர் ஆனந்தகுமார், தமிழ்நாடு ரிப்போர்ட்டர் சங்க மாவட்ட தலைவர் ராஜீவ் காந்தி, தென்னிந்திய பத்திரிக்கையாளர்கள் யூனியன் மாவட்ட பொறுப்பாளர் கமலநாதன், இந்த மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு ஆதரவாக சிபிஎம் தாலுக்கா செயலாளர் காமராஜ், சிஐடியு ஒருங்கிணைப்பாளர் கேசவன், மற்றும் விவசாய சங்க தலைவர் சிங்காரம் மற்றும் செயலாளர் ஆனந்தன் ஆகியோர் கண்டன உரையாற்றினர், இந்த ஆர்ப்பாட்டத்தில் தமிழ்நாடு உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் பலராமன், நிர்வாகிகள் எபினேஷன் அசோக்குமார், கார்த்திகேயன், ஜெயகாந்தன், திருப்பத்தூர் பிரஸ் கிளப்நிர்வாகிகள் நாகலிங்கம், முத்து, கலாம் உதவும் கரங்கள் நிறுவனர் மற்றும் சமூக ஆர்வலர் ராஜா உட்பட பலர் கலந்து கொண்டனர். முடிவில் திருப்பத்தூர் பிரஸ் கிளப் செயலாளர் சரவணன் நன்றி உரையாற்றினார்.

# மதுரையில் 3 நாட்கள் அகில இந்திய மார்பக அறுவை சிகிச்சை நிபுணர்கள் மாநாடு

## 1,000க்கும் மேற்பட்ட மருத்துவ நிபுணர்கள் பங்கேற்பு - புதிய சிகிச்சை முறைகள் குறித்து ஆலோசனை

மதுரை, ஜூலை.31-

அகில இந்திய மார்பக அறுவை சிகிச்சை நிபுணர்கள் சங்கத்தின் (Association of Breast Surgeons of India) ஆண்டு மாநில மாநாடு, முதன்முறையாக மதுரையில் ஜூலை 31 முதல் ஆகஸ்ட் 2 வரை ஹோட்டல் மேரியட்டில் நடைபெறுகிறது. இந்த மாநாட்டில் இந்தியா மற்றும் வெளிநாடுகளைச் சேர்ந்த 1,000க்கும் மேற்பட்ட மருத்துவ நிபுணர்கள் பங்கேற்கின்றனர். மார்பகப் புற்றுநோயை கண்டறிதல், சிகிச்சை மற்றும் தடுப்பு தொடர்பான நவீன மருத்துவ முறைகள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட உள்ளது. மாநாட்டில் கேடவரிக் பயிற்சி (Cadaveric Workshop), நோயியல் பயிற்சி, வீடியோ சொற்பொழிவுகள், நேரடி அறுவை சிகிச்சை விளக்கங்கள், சர்வதேச மற்றும் தேசிய நிபுணர்களின் கருத்தரங்குகள்,



முதுநிலை மருத்துவ மாணவர்களின் போஸ்டர் விளக்கக்காட்சிகள் உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. ஆகஸ்ட் 1ந் தேதி காலை 11 மணிக்கு நடைபெறும் தொடக்க விழாவில், தமிழக சுகாதாரத்துறை அமைச்சர் டாக்டர் கே.ஜி. அருண்ராஜ் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்கிறார். மதுரை கிழக்கு தொகுதி எம்.எல்.ஏ. எஸ். கார்த்திகேயன் முன்னிலை வகிக்கிறார். அதே நாள் இரவு 8.30 மணிக்கு இசையமைப்பாளர் அனூப் சங்கர் தலைமையில் கலைநிகழ்ச்சி மற்றும் விருந்து நடைபெற உள்ளது. இந்த மாநாட்டில் மார்பகப் புற்றுநோய் சிகிச்சையில் பயன்படுத்தப்படும் நவீன மருத்துவ உபகரணங்கள் மற்றும் தொழில்நுட்பங்கள் குறித்த கண்காட்சியும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மாநாட்டிற்கான ஏற்பாடுகளை ஒருங்கிணைப்புச் செயலாளர் டாக்டர் எம். சதீஷ்குமார் மற்றும் ஒருங்கிணைப்புத் தலைவர் டாக்டர் பி.கே.சி. மோகன் பிரசாத் ஆகியோர் செய்து வருகின்றனர்.

# எல்லீஸ் நகர் பகுதியில் அதிரடி ஆய்வுஆக்கிரமிப்புகள் அகற்ற உத்தரவு; தடைசெய்யப்பட்ட பிளாஸ்டிக் பயன்படுத்திய கடைகளுக்கு அபராதம்!

மதுரை, ஜூலை.31-

மதுரை மாநகராட்சி மண்டலம்3க்கு உட்பட்ட எஸ்.எஸ். காலனி, எல்லீஸ் நகர் உள்ளிட்ட பகுதிகளில் மாநகராட்சி ஆணையாளர் கௌரவ் குமார், இ.ஆ.ப., திடீர் ஆய்வு மேற்கொண்டார். சாலை சீரமைப்பு, குடிநீர் வசதி, தெருவிளக்குகள், தூய்மை பணிகள் உள்ளிட்ட அடிப்படை வசதிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். ராம் நகர் பகுதியில் வீடுகளில் இருந்து சேகரிக்கப்படும் குப்பைகளை மக்கும், மக்காத குப்பைகளாக பொதுமக்கள் தரம் பிரித்து வழங்க வேண்டும் என்றும்,





குடிநீரை சிக்கனமாக பயன்படுத்தி வீணாக்காமல் பாதுகாக்க வேண்டும் என்றும் பொது மக்களுக்கு அறிவுறுத்தினார். குடிநீர் குழாய்களில் பழுது ஏற்பட்டால் உடனடியாக சரிசெய்ய அதிகாரிகளுக்கும் உத்தரவிட்டார். இதனைத் தொடர்ந்து அப்பகுதியில் உள்ள கடைகளில் ஆய்வு மேற்கொண்ட ஆணையாளர், அனுமதிக்கப்பட்ட எல்லையை மீறி செய்யப்பட்டிருந்த ஆக்கிரமிப்புகளை உடனடியாக அகற்றுமாறு கடை உரிமையாளர்களுக்கு எச்சரிக்கை விடுத்தார். மேலும், தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பைகள் மற்றும் பேப்பர் கப் பயன்படுத்திய கடைகளுக்கு அபராதம் விதிக்க அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். பின்னர் எல்லீஸ் நகர் பகுதியில் உள்ள உரமயமாக்கும் மையத்தை பார்வையிட்ட அவர், அதன் செயல்பாடுகள் குறித்து அதிகாரிகளிடம் கேட்டறிந்தார். வளாகத்தை தூய்மையாக பராமரிக்கவும், மரக்கன்றுகள் நடவும் அறிவுறுத்தினார்.

# பாம்பன் டாஸ்மாக் கடையில் முறைகேடு? - காலி பாட்டில் தொகை பிடித்தம், காவல்துறை பெயரால் மிரட்டல் என பொதுமக்கள் குற்றச்சாட்டு

இராமேஸ்வரம், ஜூலை.31-

இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரம் தீவு பாம்பன் பகுதியில் செயல்பட்டு வரும் டாஸ்மாக் ஒயின் ஷாப் (கடை எண்: 7013) பணியாளர்கள் மீது காலி மதுபாட்டில்களுக்கான டெபாசிட் தொகையை முழுமையாக வழங்காமல் முறை கேடாகப் பிடித்தம் செய்வதுடன், புகார் தெரிவிக்கும் பொதுமக்களை காவல்துறையின் பெயரைக் கூறி மிரட்டுவதாக பொதுமக்கள் குற்றம்சா ட்டியுள்ளனர். பொதுமக்கள் கூறுகையில், அரசு விதிமுறைகளின்படி காலி மதுபாட்டில்களை திருப்பி ஒப்படைக்கும்போது அதற்குரிய டெபாசிட் தொகை முழுமையாக வழங்கப்பட வேண்டும். ஆனால், சம்பந்தப்பட்ட டாஸ்மாக் கடையில், காலி பாட்டில்களை மொத்தமாக ஒப்படைக்கும் வாடிக்கையாளர்களிடம் ஒவ்வொரு 10 பாட்டில்களுக்கும் ஒரு பாட்டிலுக்கான டெபாசிட்




தொகையான ரூ.10ஐ அநியாயமாகப் பிடித்தம் செய்து வருவதாக தெரிவித்துள்ளனர். மேலும், இதுகுறித்து நியாயம் கேட்கும் வாடிக்கையாளர்களிடம், "முழு தொகையை கேட்டால் உங்களை கள்ளச்சந்தையில் மது விற்பவர் என காவல்துறைக்கு தகவல் தெரிவிப்போம். அதன் அடிப்படையில் உங்கள் மீது நடவ டிக்கை எடுக்கப்படும்" என்று பணியாளர்கள் மிரட்டுவதாகவும் குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இந்தச் சம்பவம் பொது மக்களிடையே அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளதோடு, காவல்துறையின் பெயரை தவறாக பயன்படுத்தி மிரட்டும் செயலால் சட்டம் ஒழுங்கு அமைப்பின் நற்பெயருக்கும் பாதிப்பு ஏற்படுவதாகவும் கூறப்படுகிறது. எனவே, இந்த விவகாரம் தொடர்பாக தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் (TASMAC), மாவட்ட நிர்வாகம் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக விசாரணை நடத்தி, குற்றச்சாட்டுகள் உண்மையென நிரூபிக்கப்பட்டால் சம்பந்தப்பட்ட பணியாளர்கள் மீது துறைரீதியான மற்றும் சட்டப்பூர்வமான நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் வலியுறுத்தியுள்ளனர். மேலும், உரிய நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால், இந்த விவகார த்தை தமிழக முதலமைச்சரின் கவனத்திற்கும், ஊடகங்கள் மற்றும் செய்தியாளர்களின் பார்வைக்கும் கொண்டு சென்று, பொதுமக்களுடன் இணைந்து தொடர் போராட்டங்களில் ஈடுபடப்படும் என அப்பகுதி மக்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.



■ மதுரை மாவட்டம், கோ.புதூர் சிட்கோ தொழிற்பேட்டையில் ரூ.22.64 கோடி மதிப்பீட்டில் 0.53 ஏக்கர் பரப்பளவில், 35,000 சதுர அடி பரப்பில் தரைத்தளம் மற்றும் மூன்று அடுக்குகளுடன் கட்டப்பட்டு வரும் அடுக்குமாடி தொழில் வளாகத்தின் கட்டுமானப் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் நிஷாந்த் கிருஷ்ணாநேரில் பார்வையிட்டு ஆய்வுமேற்கொண்டார். இத்தொழில் வளாகத்தில் 39 குறுந்தொழில் முனைவோருக்கு தொழிற்கூடங்கள் ஒதுக்கீடு செய்யப்படவுள்ளன. இதன் மூலம் 250 பேருக்கு நேரடி வேலைவாய்ப்பும், 150 பேருக்கு மறைமுக வேலைவாய்ப்பும் உருவாக்கப்படும்.



■ மதுரை மாவட்டம், கள்ளந்திரி ஆரம்ப சுகாதார நிலையத்தில் காய்ச்சல் வார்டு, மருந்தகம், ஆய்வகம், பதிவு செய்யும் இடம், உள் மற்றும் வெளி நோயாளிகள் பிரிவு உள்ளிட்ட பகுதிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் நிஷாந்த் கிருஷ்ணா இ.ஆ.ப., நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு பொதுமக்களுக்கு வழங்கப்டும் மருத்துவ சேவைகள் குறித்து மருத்துவர்களிடம் கேட்டறிந்தார்.





# சிவகங்கை மாவட்டம், மாத்தூர் கிராமத்தைச் சேர்ந்த ஊர்காவலன் என்கிற ரவுடி வெட்டிக்கொலை செய்யப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது

சிவகங்கை, ஜூலை.31-

ஊர்காவலனின் உடல் பிரேதப் பரிசோதனைக்காக சிவகங்கை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், சம்பவத்தில் தொடர்புடைய குற்றவாளிகளை உடனடியாக கைது



செய்யக் கோரி உறவினர்கள் அம்பேத்கர் சிலை அருகே சாலை மறியலில் ஈடுபட்டனர். இதனால் அப்பகுதியில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. தகவலறிந்து சம்பவ இடத்திற்கு வந்த காவல்துறையினர் உறவினர்களுடன் சமாதான பேச்சுவார்த்தை நடத்தினர். அதனைத் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கலைந்து சென்றனர்.

# திருப்பூர் மாவட்டத்தில் கேஸ் சிலிண்டர் வைத்திருப்பவர்களுக்கு முக்கிய அறிவிப்பு

திருப்பூர், ஜூலை.31-

திருப்பூர் மாவட்டத்தில் உள்ள எரிவாயு நுகர்வோர்களுக்கான குறைதீர்க்கும் நாள் கூட்டமானது எதிர்வரும் 30.07.2026 (வியாழக்கிழமை) அன்று பிற்பகல் 04.30 மணிக்கு திருப்பூர் மாவட்டஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் (அறை எண்.120) நடைபெற உள்ளது. இக்குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் திருப்பூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து எரிவாயு முகவர்கள் மற்றும் எண்ணெய் நிறுவன பிரதிநிதிகள் கலந்து கொள்ள உள்ளனர். எனவே, மேற்படி குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் திருப்பூர் மாவட்டத்தில் உள்ள எரிவாயு நுகர்வோர்கள் புகார்கள், குறைபாடுகள் இருப்பின் தங்களது எரிவாயு இணைப்பு புத்தகம் அல்லது அடையாள அட்டையுடன் கலந்து கொண்டு பயன்பெறுமாறு மாவட்ட வருவாய் அலுவலர் க.கார்த்திகேயன் தெரிவித்துள்ளார்..




# சேம்பார் நடுநிலைப்பள்ளியில் மன்றத் தொடக்க விழா; 'எல்நினோ' குறித்து விழிப்புணர்வு

காளையார்கோவில், ஜூலை.31-

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் ஒன்றியம், சேம்பார் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் நடப்பு கல்வியாண்டிற்கான பள்ளி மன்றத் தொடக்க விழா சிறப்பாக நடைபெற்றது. பள்ளி தலைமையாசிரியர் சுரேஷ் தலைமை தாங்கினார். மாணவர்களின் தனித்திறன்களை மேம்படுத்தும் நோக்கில் இலக்கியம், வினாடிவினா, இளம் செஞ்சிலுவைச் சங்கம் (JRC), அறிவியல், சுற்றுச்சூழல் (ஈகோ கிளப்), சிறார் திரைப்படம், கணிதம் மற்றும் பள்ளி விழாக்கள் உள்ளிட்ட பல்வேறு மன்றங்கள் தொடங்கப்பட்டு, அவற்றுக்கான பொறுப்பாசிரியர்கள் மற்றும் மாணவத் தூதுவர்கள் தேர்வு செய்யப்பட்டனர். விழாவில் பேசிய தலைமையாசிரியர்




சுரேஷ், ஒவ்வொரு மன்றத்தின் நோக்கம், செயல்பாடுகள், மாணவத் தூதுவர்களின் பொறுப்புகள் மற்றும் மாதந்தோறும் மேற்கொள்ள வேண்டிய செயல்பாடுகள் குறித்து மாணவர்களுக்கு விளக்கினார். தொடர்ந்து, உலகளவில் தாக்கத்தை ஏற்படுத்தி வரும் 'எல்நினோ' (El Nino) காலநிலை மாற்றம், அதன் காரணங்கள் மற்றும் சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் பாதிப்புகள் குறித்து மாணவர்களுக்குப் புரியும் வகையில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. நிகழ்ச்சியின் நிறைவில் ஆசிரியர் காளீஸ்வரன் நன்றி கூறினார். இதில் பள்ளி ஆசிரியர்கள், மாணவ மாணவிகள், சத்துணவு பணி யாளர்கள் மற்றும் பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

■ திருப்பூர் மாவட்ட ஆட்சியர் டாக்டர்.மனிஷ் நாரணவரே மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டார்கள். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் .க.கார்த்திகேயன் உள்ளார்.




Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161